# “தேவ பிதா எந்தன் மேய்ப்பன்”

இன்றைக்கு கிறிஸ்தவ சமுதாயத்தில், இந்தியாவில் மட்டுமல்லாது, அகில உலகத்தில் வாழும் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான, எல்லா சூழ்நிலைக்கும் ஏற்றாற்போல் அமைந்து பாடப்படும் பாடல்களில் ஒன்றுதான் “தேவபிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ” என்ற கீர்த்தனை.

1853ம் ஆண்டு வெப் ஐயரவர்களின் முயற்சியால் அநேக தேவபிள்ளைகள் அனுபவ ரீதியாக பாடின பல கீர்த்தனைகளை தொகுத்து ‘கிறிஸ்தவ நூல் சங்கத்தின்’ மூலம் பல பாடல்கள் புத்தக வடிவில் வெளியானது. இப்பாடல்கள் தமிழ் மக்களிடையே சிறப்பான வரவேற்பை பெற்றதால் கி.பி.1900 ஆண்டுகளுக்குப் பின் மேலும் பல பாடல்கள் கனம் சாண்டலர் ஐயர் அவர்கள் மூலம் புது பொலிவு பெற்று வெளியானது. இச்சமயத்தில் தான் நெய்யூரைச் சார்ந்த த.யோசேப்பு என்பவர் இப்பாடலைப்பாடி வெளியிட அநேகர் எளிதில் கற்றுக்கொள்ளக்கூடியதும், பாடக்கூடியதுமான பாடலாக இப்பாடல் இருந்தது.

யோசேப்பு சிறுவனாக இருந்த பொழுது இளமைப் பருவத்திலேயே தனது தந்தையை இழந்தார். தந்தையைப் பிரிந்த சோகத்தின் பிடியில் இருந்த யோசேப்பின் தாயாரும் உடன் பிறந்த சகோதர சகோதரிகளும், வறுமையால் வெகுகடினமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டார்கள். அச்சமயத்தில் யோசேப்பின் உள்ளத்தை தேற்றியது இயேசுவின் பிரசன்னமே, சிறு வயதில் யாரோ சிலரால் சங்கீதம் 23ஐ தெரிந்து கொண்டார். எந்த நிலையிலும் கடவுள் நமது மேய்ப்பராக இருந்தால், நாம் அவருடைய ஆடுகளாக பாவிக்கப்பட்டு, மேய்ப்பன் ஆடுகளை துஷ்ட மிருகங்களிலிருந்து காப்பாற்றுவது போல, கடவுளும் நம்மை காப்பாற்றி வருவார் என்று அறிந்து கொண்டது யோசேப்பை வியப்பில் ஆழ்த்தியது. தன் தகப்பன் மரித்தாலும், தேவன் எங்கள் மேய்ப்பராயிருந்து எங்களை காப்பாற்றுவார் என்ற விசுவாசம் யோசேப்பின் உள்ளத்தில் வளர்ந்தது.